அன்புள்ள விகடன் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

05.09.04 நாளிட்ட ஆனந்த விகடன் இதழில் ஹாய் மதன் பகுதியில், நல்லெண்ணெய் என்பது எள்ளெண்ணெய் என்று அழைக்கவேண்டும் என்ற கேள்வியில் மதன் அவர்கள், எள் + நெய் = எண்ணெய் என்றும் அதுதான் முதலில் தோன்றிய எண்ணெய் என்றும் கூறிய பதில் மிகவும் சரியானது.

நல்லெண்ணெய் என்று பெயர் வரக்காரணம், " பிறகு நல்ல என்ற வார்த்தையை நம் முன்னோர்கள் சேர்த்திருப்பார்கள். பிற்காலத்தில் இத்தனை எண்ணைய் வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது" என்று மதன் நல்லெண்ணெய்க்கு அவர் அளித்த விளக்கம் உண்மைக்கு மாறான தகவல். நல்லெண்ணெய் என்பதில் உள்ள நல்ல என்பது ஆங்கிலத்தில் வழங்கப்படும் "good" என்ற பொருளில் வழங்கப்படுவதாக கருதுவது பெரும் பிழையாகும். நல்ல என்பது நல்லம் என்பதிலிருந்து வந்ததாகும். நல்லம் என்றால் கருப்பு என்று தமிழில் பொருள். எள் கருப்பாக இருப்பதால் அதிலிருந்து பெறப்படும் எண்ணெய் நல்லெண்ணெய் என வழங்கப்பட்டது. கிராமப்புறங்களில் நல்லம்மாள், நல்லையன், நல்லுசாமி, நல்லாயி என்பது முறையே கருப்பம்மாள், கருப்பையன், கருப்புசாமி, கருப்பாயி இன்றும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நல்லெண்ணெய் என்பது நல்ல + எண்ணெய் எனப் பொருள் கொண்டால் நல்ல பாம்பு என்பதை நல்ல + பாம்பு என்று பிரித்து மிக அருமையான பாம்பு, சிறந்த குணம், பண்பு கொண்ட பாம்பு என பொருள் கொள்ள வேண்டியிருக்குமே. நல்ல பாம்பு என்பதும் கருப்பு நிறம் கொண்ட பாம்பு என்ற பொருளிலே வழங்கப்படுகிறது.

எனவே, நல்லெண்ணெய் என்பது கரும்பு நிறம் கொண்ட எள்ளிலிருந்து பெறப்படும் நெய் என்பதே பொருத்தமுடையதாகும். என்னுடைய விளக்கத்தை வெளியிட்டு வாசகர்களுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இதற்கு முன் நான் அனுப்பிய மயில் தேசியப் பறவை குறித்து அனுப்பிய விளக்கத்தைத் தாங்கள் இதுவரை வெளியிடவில்லை என்றும் அறிகிறேன்.

நன்றி.

தங்கள் அன்புள்ள,

முனைவர் தி.நெடுஞ்செழியன் / 07.09.2004.
தமிழ் விரிவுரையாளர், அ.வ.அ. கல்லூரி,
மன்னன்பந்தல் - 609 305. மயிலாடுதுறை.